# அறிவித்தல்

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் Iம் தர உத்தியோகத்தரிற்கிடையில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பதவிக்கு மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

வட மத்திய மாகாண அமைச்சின் கீழ் உள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு, தகுதிகளைப் பெற்றுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் (வகுப்பு I) சேர்ந்த அதிகாரிகளிடமிருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | வெற்றிடமாகக் காணப்படும் பதவி | அனுமதிக்கப்பட்ட தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி.சே I | 01 |
| 02 | வலயக் கல்விப் பணிப்பாளர் (திம்புலாகல) | இ.க.நி.சே I | 01 |
| 03 | வலயக் கல்விப் பணிப்பாளர் (கலென்பிந்துனுவெவ) | இ.க.நி.சே I | 01 |
| 04 | வலயக் கல்விப் பணிப்பாளர் (கெபிதிகொல்லேவ) | இ.க.நி.சே I | 01 |
| 05 | வலயக் கல்விப் பணிப்பாளர் (பொலன்னறுவை) | இ.க.நி.சே I | 01 |

02. தகைமைகள்

I. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் Iம் தர அதிகாரியாக இருக்க வேண்டும்.

II. கடந்த 05 ஆண்டுகளுக்குள் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்பட்டிருக்கக் கூடாது மற்றும் எதிர்காலத்தில் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படுபவராக இருத்தல் கூடாது

III. கடந்த 05 ஆண்டுகளுக்குள் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து ஊதிய உயர்வுகளையும் பெற்றிருக்க வேண்டும் மற்றும் விண்ணப்பங்கள் பெறப்படும் இறுதித் திகதியன்று திருப்திகரமான சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

IV. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தத்தமது பதவியில் பணியாற்ற உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

V. விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியன்று, அப்பதவிக்கான நியமனம் தொடர்பான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. விண்ணப்படிவம் அனுப்ப வேண்டிய முகவரி

விண்ணப்பதாரர்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு (இணைப்பு 01) இணங்க, A4 அளவு தாளில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, 2026.09.11 ஆம் ஆண்டுக்குள் அல்லது அதற்கு முன்னர், திணைக்களப் பிரதானி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் மூலமாக (வட மத்திய மாகாணம் தவிர மற்ற மாகாண சபைகளின் விண்ணப்பதாரர்கள், சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான செயலாளரின் பரிந்துரைகளுடன் அனுப்பப்பட வேண்டும்) “செயலாளர், பிரதான அமைச்சு, மாகாண சபை நிர்வாகக் கட்டிடம், ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுர” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்ப வேண்டும். (மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் மதிப்பெண் வழங்கும் திட்டத்தை **www.cm.nc.gov.lk** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்)

II. மேலும், பல பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில், விண்ணப்பிக்கும் பதவிகளின் முன்னுரிமையானது, மாதிரி விண்ணப்பப் படிவத்தின் தொடர் இல 01-இன் கீழ் வரிசைக்கிரமமாக குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் “இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் I பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்” எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

III. கடைசித் திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதியன்று தகுதி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் ஆகியவை முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தாமதமாவது அல்லது தொலைந்து போவது தொடர்பான எந்தவொரு புகாரும் வட மத்திய மாகாண பிரதான அமைச்சினல் ஏற்றுக்கொள்ளப்படாது.

04. தெரிவு செய்யும் முறைமை

I. மேலே பந்தி 02-இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள், வட மத்திய மாகாண பிரதான அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட ஒரு நேர்காணல் குழுவால் முறைப்படுத்தப்பட்ட நேர்காணலுக்கு உட்படுத்தப்படுவர். மேலும், சேவைமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் (இணைப்பு 02-இல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பெண் திட்டத்தின்படி) மதிப்பெண்கள் வழங்கப்படும். அந்த மதிப்பெண்களின் அடிப்படையில், அதிக மதிப்பெண்களைப் பெறும் அதிகாரி/அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

குறிப்பு: கல்வித் தகுதிகளை நிரூபிக்கும் அனைத்துச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள், தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் ஆகியவற்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

I. இருப்பினும், விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது, விண்ணப்பதாரர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப வெற்றிடமாக உள்ள பதவிகளைப் பரிந்துரைக்கலாம், மேலும் அந்தப் பதவிகளுக்கு நியமனம் செய்யும்போது அந்த விருப்பமும் கருத்தில் கொள்ளப்படும்..

05. இங்கு ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். எனினும், நடத்தப்பட்ட முறைசார் நேர்காணலில் பெற்ற மதிப்பெண்களைக் கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிட்ட பதவிக்காக தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அவ்வெற்றிடத்திற்காக தேர்வு, நியமனம் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் தொடர்பான அனைத்து விடயங்களிலும் வட மத்திய மாகாண அமைச்சின் பிரதான செயலாளரின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

06. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் இவ்வறிப்பில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள அறிவித்தலே சரியானதாகக் கருதப்படும்.

**கே.எம்.எச்.எஸ்.கே.ஜயலத்,**
செயலாளர்,
வட மத்திய மாகாண கல்வி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சட்டம் மற்றும் ஒழுங்கு , நிதி மற்றும் திட்டமிடல், சிறப்பு திட்டங்கள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் கலாச்சார விவகார அமைச்சு.
வடமத்திய மாகாணம்.

2026.08.21